**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2022**

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| மனைப்பொருளியல் **Home Economics** | **Three Hours** / **Gr- 12 (2023)** | **28** | **T** | **I,II** |

### பகுதி I

❖ ***1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

01) கட்டடங்கள் மனிதனாலாக்கப்பட்ட சூழல்களை வடிவமைக்கும் போது பொருத்தப்பாடாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
(1) பிரதேசத்தின் நியம அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் பொருந்தியமைதல்
(2) ஆக்கங்கள் கண்கவர்தன்மை கொண்தாக அமைதல்
(3) கலைத்துவம் மிக்கதாக அமைந்திருத்தல்
(4) பொருளதாரத்திற்கு ஏற்றதாக அமைந்திருத்தல்
(5) பாதுகாப்பாக நிர்மானித்தல்

02) செயலூக்கம், சந்தம், இலலிதம், பரபரப்பு போன்றவற்றைக் காட்டும் கோடு எது?
(1) சரிவுகோடு (2) வளைகோடு (3) வளைநெளிகோடுகள்
(4) கிடைக்கோடுகள் (5) நிலைக்குத்துக்கோடுகள்

03) பச்சை துணைவர்ணத்தைப் பெற்றுக்கொள்ள தேவையான முதன்மை வர்ணம் எவை?
(1) சிவப்பு + நீலம் (2) மஞ்சள் + நீலம் (3) மஞ்சள் + சிவப்பு
(4) சிவப்பு + ஊதா (5) சிவப்பு + செம்மஞ்கள்

04) நாகரீகத்தின் பொற்காலம் எனக்குறிக்கப்படும் காலப்பகுதியாக கருதப்படுவது
(1) 1870 – 1950 (2) 1850 – 1940 (3) 1850 – 1960
(4) 1880 – 1920 (5) 1875 – 1970

05) மின்விளக்குகளில் சக்தி இழப்பு மிகக்குறைவானதாக அமைவது?
(1) 100N மின் இழைமின்குமிழ் (2) 40w மின்இழைமின்குமிழ்
(3) 40w வெள்ளொளிர்வு மின்விளக்கு (4) LED மின்விளக்கு
(5) 20N வெள்ளொளிர்வு மின்விளக்கு

06) உட்புற வெளியை நிர்மாணிக்கும் போது பயன்படுத்தப்படும் துணைக்கூறுகளில் அடங்குபவை
(1) திரைச்சீலைகள் (2) தடாகம் (3) ஒளியூட்டம்
(4) நீர்வீழ்ச்சிகள் (5) நிலாமுற்றம்

07) வீட்டின் உட்பகுதி வெப்பமடைவதை செங்கட்டிச்சுவர்கள் குறைக்கும் இச்சுவர் அமைக்கப்படும் திசைகள்
(1) கிழக்கு, வடக்கு திசைகளுக்கு (2) கிழக்கு மேற்குத் திசைகள்
(3) தெற்கு மேற்குத் திசைகள் (4) வடக்குதெற்குத்திசைகள்
(5) கிழக்குத் தெற்கு திசைகள்

08) செயற்கை ஒளியின் அளவு அதாவது ஒளியின் செறிவு அளவிடப்படு அலகு
(1) Lux (2) kg (3) KJ (4) MM (5) MCM

09) இலற்றோசு ஆசிய டைசக்ரைட்டு உருவாவதற்கு பயன்படும் மொனோசக்கரைட்டு எது?
(1) குளுக்கோசு + குளுக்கோசு
(2) குளுக்கோசு + பிரற்றோசு
(3) பிரற்ரோசு + கலற்றோசு
(4) குளுக்கோசு + கலற்றோசு
(5) குளுக்கோசு + மோல்ரோசு

10) அமைலோசு, அமைலோபெத்தின் சங்கிலிகளால் உருவாக்கப்பட்டுள்ள போசணை எது?
(1) புரதம் (2) கொழுப்பு (3) மாப்பொருள்
(4) விற்றமின் (5) கனியுப்பு

11) பின்வரும் அமினோ அமிலங்களில் அத்தியவசியமற்ற அமினோ அமிலம் எது?
(1) லியூசின் (2) திரியோனின் (3) சிற்றீன்
(4) வலீன் (5) இலைசீன்

12) அடினின், பிரிடொக்சின், அடினோசின் என்பன முறையே எவ்விற்றமின்கள் ஆகும்
(1) $B_1$, $B_2$, $B_5$ (2) $B_4$, $B_6$, $B_8$ (3) $B_7$, $B_1$, $B_2$
(4) $B_9$, $B_{10}$, $B_{11}$ (5) $B_{11}$, $B_7$, $B_2$

13) A – அயடீன் B - பொற்றாசியம் ஐதரொட்சைட்டு
C – செப்புசல்பேற்று D - சூடான3 கரைசல்
E – பெனடிக்கரைசல்
தரப்பட்ட சோதனைப் பொருட்களில் கொழுப்பை இனங் காண்பதற்கான சோதனைப் பொருள் யாது?
(1) C (2) A (3) B (4) D (5) E

14) நாளாந்த சக்தித் தேவையில் புரதம் மூலம் எத்தனை வீதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(1) 15 – 20% (2) 10 – 15% (3) 25 – 30%
(4) 18 – 20% (5) 15 – 30%

15) முளையத்தின் விருத்தி, நரம்புகள், இதயம், சிறுநீரகங்கள், குருதிக்கலன்கள் நீர்பீடனத் தொகுதி ஆகியவற்றின் சீரான தொழில்பாட்டுக்கு உதவும் கொழுப்பமிலம் எவை?
(1) ஒமேக்கா 2, 6 (2) ஒமேக்கா 3, ஒமேக்கா 6 (3) ஒமேக்கா 2, ஒமேக்கா 4
(4) ஒமேககா 5, ஒமேக்கா 7 (5) ஒமேக்கா 7 ஒமேக்கா 8

16) வாயில் காணப்படும் உமிழ்நீர்ச்சுரப்புகள் எத்தனை?
(1) 2 (2) 3 (3) 3 சோடி (4) 5 (5) 2 சோடி

17) உடலில் எவ்வுறுப்பு பித்தத்தை உற்பத்தி செய்து கொழும்பு சமிபாட்டுக்கு உதவுகிறது?
(1) சதையீ (2) இதயம் (3) முன்சிறுகுடல்
(4) ஈரல் (5) களம்

18) Ca, mg ஆகிய கனியுப்பு அகத்துறிஞ்ச தேவையான விற்றமின் எது?
(1) விற்றமின் A (2) விற்றமின் C (3) விற்றமின் D
(4) விற்றமின் $B_2$ (5) விற்றமின் K

19) இலைப்பேசு எனும் நொதியத்தைச் சுரக்கும் உறுப்பு எது?
(1) ஈரல் (2) முன்சிறுகுடல் (3) இரைப்பை
(4) சதையி (5) பித்தப்பை

20) A - உயர்குருதி அமுக்கம்
B - ஸ்கேவிறோய்

C – மாலைக்கண்
D - இதயக்கோளாறு
மேலே தரப்பட்டவற்றுள் உடல் கொழுத்த நிலை காரணமாக ஏற்படும் நோய்
(1) A, B (2) B, C (3) AD (4) AC (5) BD

21) உடற் திணிவுச் சுட்டியில் "உயரத்துக்கமைய நிறை கூடுதலானது உடல் நிறையை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்" இதில் அடங்கும் BMI பெறுமானம்
(1) BM1 18.5 குறைவு (2) BMI 20.5 – 30.5 வரை (3) BMI 25.0 – 30 வரை
(4) BMI 30 இற்கு மேல் (5) BMI 18.5 – 24.9 வரை

22) பல் முளைத்தல் தாமதமாதல்
நடத்தல் தாமதமாதல்
கால்கள் வக்கரித்தல்
என்பு மெலிவடைதல் இவ் நோய் அறிகுறிகள் எச்சத்துன்குறைவால் ஏற்படுகிறது?
(1) இரும்பு (2) கல்சியம் (3) விற்றமில் C
(4) கொழுப்பு (5) மாப்பொருள்

23) 5 வயதிலும் குறைவான பிள்ளைகளில் குறள்தன்மை அதிகளவில் பதிவாகியுள்ள பிரதேசங்கள்
(1) திருகோணமலை (2) கொழும்பு (3) யாழ்ப்பாணம்
(4) வவுனியா (5) கண்டி

24) உணவுக் கூம்பகத்தில் நாளாந்த அளவு 2 – 3 உள்ளெடுக்கும் உணவுகள்
(1) பால் பாலுற்பத்திப் பொருட்கள் (2) காய்கறிகள்
(3) சோறுதானிய உணவுகள் (4) பழங்கள்
(5) எண்ணெய் சீனி வகைகள்

25) "அளவாக இருக்க அளந்து உண்க" என்ற கருப்பொருளில் அமைக்கப்பட்ட போசணைத்தட்டு எத்தனையாம் ஆண்டு இலங்கையில் வடிவமைக்கப்பட்டது
(1) 2000 (2) 1976 (3) 2010 (4) 2018 (5) 2015

26) இலங்கையில் பாடசாலை செல்லும் வயதுப் பிரிவில் எத்தனை சதவீதத்தினர் அயடீன் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்?
(1) 20 சதவிதம் (2) 25 சதவிதம் (3) 10 சதவிதம்
(4) 30 சதவிதம் (5) 15 சதவிதம்

27) ஆரோக்கியமான ஒருவரது குருதியமுக்க அளவு
(1) 120 / 50m Hg (2) 120 / 80mmHg (3) 120 / 160mmHg
(4) 120 / 30mmHg (5) 120 / 60mmHg

28) தோல், தலைமயிர் உலர்வான தன்மை, கண்உலர்தன்மை, கண்களில் பிற்றோ புள்ளிகள் இக்குறைபாடு எச்சத்துக்குறைவினால் ஏற்படுகிறது?
(1) விற்றமின் C (2) விற்றமின் $B_{12}$ (3) விற்றமின் A
(4) விற்றமின் E (5) விற்றமின் D

29) அங்கிகளில் உடலில் இயற்கையாகக் காணப்படும் அமினோ அமிலங்களின் எண்ணிக்கை
(1) 10 (2) 30 (3) 25 (4) 20 (5) 32

30) தனிநிரம்பா கொழுப்பமிலம் எது?
(1) இனோலெயின் (2) பாமிற்றிக் (3) ஒலேயிக்
(4) தியறிக் (5) அரக்சிடோனிக்

(1 x 30 = 30 புள்ளிகள்)

## பகுதி – II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) 1) சிறந்த வாழ்க்கைச் சூழலாக சமூகவாழ்க்கைச் சூழல், பௌதிக வாழ்க்கைச் சூழல் அமைகின்றன இங்கு பௌதிக வாழ்க்கைச் சூழலை அடிப்படை மூன்று பகுதியாக வகுத்துக் காட்டலாம் அவற்றைக் குறிப்பிடுக.
*2)* வடிவமைத்தலின் அடிப்படை அம்சங்களை விளக்குக.
*3)* புடைவர்ணம் எவ்வாறு உருவாகிறது என விளக்குக.
*4)* "சஞ்சரித்தல் தகவு" என்பதை விளக்குக.
*5)* பரவலாகக்காணப்படும் பல்சக்கரைட்டு வகையைக் குறிப்பிடுக.
*6)* முழுப்புரதம் என்பதை விளக்குக.
*7)* நீரிழிவு நோயாளி நார்ப்பொருள் உணவுகளை உட்கொள்வது சிறந்தது இதனை விளக்குக.
*8)* பால்சார்ந்த உற்பத்திகள் 4 குறிப்பிடுக.
*9)* ஈரல், பித்தப்பையின் தொழில்பாட்டை விளக்குக.
*10)* உணவு உட்கொண்டபின்னரோ அல்லது உணவு உட்கொள்ள முன்னரே தேநீர், கோப்பி அருந்துவது தவிர்க்க வேண்டும் இதன் காரணத்தை விளக்குக.
*11)* வாழ்க்கைவட்டத்தின் 4 பருவங்களையும் குறிப்பிடுக.

(11 x 2 = 22 புள்ளிகள்)

02) 1) கிரமங்களும் நகரங்களும் எவ்வாறு தாபிதமாயின என விளக்குக.
*2)* பண்பாட்டியல் தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் குறிப்பிடுக.
*3)* கற்காலத்தில் இருந்து தற்காலம் வரை வாழ்க்கைச் சூழலை உருவாக்க மனிதன் முயற்சிசெய்த முறையை ஒழுங்கு முறையில் தருக.
*4)* கட்டங்களின் அருகே பல்வேறு நிலத்தோற்றங்களை நிருமானிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிலத்தோற்றக்கூறுகள் எவை

(2 x 4 = 12 புள்ளிகள்)

03) 1) வடிவமைப்பின் அடிப்படை அம்சமான வடிவம் என்பதை விளக்குக.
*2)* வடிவமைப்புக் கோட்பாடுகள் எவை?
*3)* மென் நிலத்தோற்ற வடிவமைப்பை வரையறை செய்து விளக்குக.
*4)* புறவெளியை வடிவமைக்கும் போது கவனத்தின் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

(3 x 4 = 12 புள்ளிகள்)

04) 1) காபோவைதரேற்றை எத்தனை வகையாக அவை எவை என விளக்குக.
*2)* புரதத்தின் இயல்பு கொட்டுப்போவதற்கு காரணமானவற்றை குறிப்பிடுக.
*3)* நிரம்பிய கொழுப்பமிலத்தை வரைவிலக்கணப்படுத்துக.
*4)* விற்றமின்களை வகைப்படுத்திக் காட்டுக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

05) 1) உணவுச சமிபாடு என்பதை விளக்குக.
*2)* அல்லூட்ட வகையைக் குறிப்பிட்டு விளக்குக.
*3)* அயடீன் குறைபாடு காரணமாக ஏற்படும் அறிகுறிகள் 4 தருக.
*4)* உணவுக் கூம்பகத்தை வரைந்து நாளாந்த அளவுகளையும் குறிப்பிடுக.

(3 x 4 =12 புள்ளிகள்)

06) 1) இலங்கையில் காணப்படும் பிரதான தொற்றாத வகை நோய்கள் 4 குறிப்பிடுக.
*2)* இதயநோயின் அறிகுறிகளைக் குறிப்பிடுக.
*3)* இதயநோயாளி ஒருவருக்கு மதியநேர உணவுப்பட்டியல் ஒன்றைக் குறிப்பிடுக.
*4)* நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக.

(3 x 4 = 12 புள்ளிகள்)